1972 சனவரி 31]

திரு. கே. எ. வகாப் : தற்போது இல்லையென்றால் எதிர்காலத்தில் வரும் என்ற பாணியில் அமைச்சரவர்கள் சொன்னார்கள். நிச்சயமாக அந்த முறை வரவேண்டும். ஏனென்று கேட்டால் அந்த நேரத்தில் தான் டிரைவர்கள் தூங்குகிற நேரமாக இருக்கிறது. ஆகவே, அதை ஆலோசனை செய்து விரைவில் இதற்கான உத்தரவு போட அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : அந்த குறிப்பிட்ட நேரத்தைப் பொறுத்தவரையில் எந்த வகையான விபத்துகள் நடைபெறுகின்றன என்பதை அரசு ஆராய்ந்தது மட்டுமல்லாமல், 1 மணியிலிருந்து 4 மணி வரை நாம் சோதனை நடத்தினால் போதும், அந்தச் சோதனைகள் நடத்துவது நடைமுறையில் சாத்தியமா என்பதைப் பற்றி அரசு இப்போது ஆராய்ந்து வருகிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி : தலைவரவர்களே, இரவு இரண்டு மணி முதல் 4 மணி வரையில் லாரி ஓட்டக்கூடாது என்று விதி போடாமல் இரண்டு டிரைவர்கள் போட்டு ஓட்ட வேண்டும் என்று உத்தரவு போடமுடியுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இரண்டு டிரைவர்கள் லாரிகளிலே போவது அனுமதிக்கப்பட வேண்டுமென்ற கருத்தும் அரசின் பரிசீலனையில் இருந்துவந்தது. ஆனால் அதிலே உள்ள சிரமங்கள் என்னவென்றால் சில பெரிய லாரி நிறுவனங்கள் ஆட்களை ஷிப்ட் முறையில் மாற்றுகிறார்கள். டி.வி.எஸ். எபி.டி. போன்ற நிறுவனங்கள் இப்படி செய்கின்றன. இந்த இரண்டு டிரைவர்கள் வைத்துக்கொள்ளவேண்டுமென்று சொன்னால், ஒரு டிரைவர் படுத்து தூங்குவதற்கு வசதி செய்து தரவேண்டும். அந்த வசதிகள் செய்து தருவதில் கஷ்டம் இருக்கிற காரணத்தால், அந்த உத்தரவு போடுவது நிறுத்திவைக்கப்பட்டிருக்கிறது.

திரு. எம். தேவராசன் : தலைவரவர்களே, இரவில் செல்லும் ஆம்னிபஸ்கள் அதி வேகமாக செல்கின்றன என்பதை அரசு அறியுமா ? அதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, ஆம்னிபஸ்களை பொறுத்த வரையில் கிட்டத்தட்ட இப்போது 46 பஸ்களில் அரசாங்கம் சோதனை செய்து, சோதனைகள் மூலம் கைப்பற்றி இருக்கிறது என்பதை இந்த மன்றத்திலே அனைவரும் அறிவர். ஆம்னிபஸ்கள் இப்போது இதே நெருக்கடி நிலையை ஏற்படுத்தி இருக்கின்றன. இதிலே டிரைவர்களை மாற்றுவதற்கு வசதி இல்லாமல், அவர்கள் ஒரே நேரத்தில் 2 டிரைவர்களை வைத்து ஓட்ட முடியவில்லை.

தொலைதூர அரசுப் பேருந்துகளில் குளிர்சாதன வசதி

*205 **வினா—திரு. பி. எஸ். மணியன் :** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

நீண்டதூரம் செல்லும் அரசுப் பேருந்துகளில் 'குளிர் சாதன வசதி' செய்வது குறித்த செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இல்லை.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவரவர்களே, இந்த நீண்ட தூரம் ஓடுகின்ற பஸ்களிலே சீட் அமைக்கப்பட்டிருக்கிறது. இந்த சீட் முறையானது கஷ்டமாக இருக்கிறது. 2-க்கு மூன்று சீட் அமைத்திருக்கிறார்கள். இதை 2-க்கு 2 ஆக அமைத்து அதில் கைவைப்பதற்கு இடங்கள் வைத்து நல்ல முறையில் இருக்கவேண்டும். இரவு நேரங்களில் ஓடுகின்ற பஸ்களில் இந்த வசதி செய்ய முயல்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, இப்போது அண்மையிலே கட்டப்பட்டு விடப்பட்ட பேருந்துகள் 33-க்கு 2 வகையில் நல்ல வசதியோடு இருக்கும், மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. இந்தப் பேருந்துகளில் இன்னும் வசதிகள் வைக்காத காரணம் அந்த மெஷின்கள் எல்லாம் வாங்குவதற்கு கூட ஏற்பாடுகள் நடைபெற்றபோது அண்மையில் நடந்த யுத்தத்தின் காரணமாக அவைகளை பெற முடியவில்லை. அவைகளைப் பெறுவோமானால் எல்லா பஸ்களிலும் 3-க்கு 2 வகையில் இருக்கின்ற பேருந்துகள் வசதியாக இருக்கும். இருந்தாலும் கூட 2-க்கு 2 சீட்டுகள் என்ற அளவில் டூரிஸ்டு லக்சரி கோச்சுகள் என்ற முறையில் அரசாங்க போக்குவரத்துத் துறையில் ஒரு 10 அல்லது 15 பேருந்துகள் கட்டுவதற்கு ஒரு திட்டம் நடைமுறையில் இருக்கிறது.

தொலைதூர துரிதப்பேருந்துகளின் பெயர்கள்

* 206 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தமிழ்நாடு அரசுக்குச் சொந்தமான தொலைதூர துரிதப் பேருந்துகளுக்கு தமிழ் மன்னர்களின் பெயரையும் தலைவர்களின் பெயரையும் வைக்கும் உத்தேசம் ஏதேனும் அரசுக்கு உள்ளதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: இல்லை.

Lorries emitting smoke

* 207 Q.—DR. H. V. HANDE: Will the Hon. the Minister for Transport be pleased to state—

(*a*) whether it is a fact that lorries and cars were booked by police in the City of Madras around the first week of September 1971 due to their emitting too much of smoke; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) 1971, செப்டம்பர் திங்கள் முதல் வாரத்தில் சென்னை மாநகரத்தில் அதிகமான அளவு புகையை வெளி விடும் காரணத்திற்காக லாரிகள் மீது மட்டுமே காவலர்களால் வழக்கு பதிவு செய்யப்பட்டது. கார்கள் பொதுவாக அதிகமான அளவு புகையை வெளி விடா என்ற காரணத்திற்காக, கார்கள் மீது வழக்கு பதிவு செய்யப்படவில்லை.

(இ) 1971 செப்டம்பர் முதல் வாரத்தில் மும்முர ஊக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அப்போது மக்கள் நல்வாழ்வுத் துறை